கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.341/2020

வா.சா. –2 ( பெருமாள் சாமி)

நாள். 29.08.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததா என்றால் வந்தது. 14ம் பிரதிவாதி முத்தம்மாள் எனது உடன்பிறந்த சகோதரி. 15ம் பிரதிவாதி கார்த்திக் எனது மகன். அவர்கள் சொல்லித்தான் சாட்சி சொல்வதற்காக வந்தேன். இவ்வழக்கில் என்னென்ன சொத்துக்கள், என்னென்ன சர்வே நம்பர்கள் உள்ளது என்று என்னால் சொல்ல முடியாது. இவ்வழக்கில் உள்ள சொத்துக்கள் வாதிக்கு எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கின் வாதி நீதிமன்றத்தில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சொத்தில் 22 ஓட்டு வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அந்த ஓட்டு வீடுகளில் மின் இணைப்பு, தண்ணீர் இணைப்பு ஆகியவை உள்ளன. மேற்படி வீடுகள் அந்த இடத்தில் 25 ஆண்டுகளாக உள்ளன என்றால் 20 ஆண்டுகளாக உள்ளன. முத்துச்சாமி கவுண்டரிடம் இவ்வழக்கின் 1 முதல் 11 பிரதிவாதிகள் சொத்தை கிரையம் வாங்கி வீடு கட்டி உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் உள்ள 1 முதல் 3பிரதிவாதிகள் சர்வே எண்.173 /6 ல் 11 1/2 செண்ட் வாங்கி வீடு கட்டி உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதே போல் 4 முதல் 11 பிரதிவாதிகள் சர்வேஎண்.173/5A ல் 33 1/2 செண்ட் வாங்கி வீடுகள் கட்டி உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 1 முதல் 11 பிரதிவாதிகள் , 12 முதல் 15 பிரதிவாதிகளுக்கு எதிராக திண்டுக்கல் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.289/2014 என்ற வழக்கு விளம்புகை பரிகாரம் கேட்டு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் சாட்சி சொல்லவில்லை. அந்த வழக்கின் ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை. அந்த வழக்கில் என் சகோதரி மற்றும் அவரது மகனுக்கு சொத்தில் உரிமையில்லை என தீர்ப்பாகிவிட்டது என்றும் ஆனால் அதன் பின்னிட்டு வாதிக்கு பொய்யான கிரையப்பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதி பெயரில் உற்பத்தி செய்யப்பட்ட பத்திரத்தில் மேற்படி 22 வீடுகள் மின்இணைப்புகள், தண்ணீர் இணைப்புகள் காட்டவில்லை என்றால் தெரியாது. அந்த பத்திரங்களை நான் படித்து பார்க்கவில்லை. நான் அங்கு குடியிருப்பவர்களை விசாரிக்கவில்லை. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொன்ன விவரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

**என் சகோதரி மற்றும் அவரது மகனுக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போதும் அந்த 22 வீடுகளில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். அ ந்த 22 வீடுகளில் 21 வீடுகள் ஓட்டு வீடுகள் என்றும் 1 வீடு ஆஸ்பெஸ்ட்டாஸ் கூரை போட்ட வீடு என்றால் சரிதான்.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.09.03 19:29:29 +0530

Additional District Judge,

Dindigul.